॥ श्रीः ॥

श्रीनीलकण्ठदीक्षितकृतः

॥ आनन्दसागरस्तवः ॥

ஸ்ரீ நீலகண்ட தீக்ஷிதர் இயற்றிய

ஆனந்த ஸாகரஸ்தவம்

विज्ञापनार्हविरलावसरानवाप्या
मन्दोद्यमे मयि दवीयसि विश्वमातुः ।
अव्याजभूतकरुणापवनापविद्धा-
न्यन्तः स्मराम्यहमपाङ्गतरङ्गितानि ॥ १ ॥

விண்ணப்பிப்பதற்குகந்த தனித்த வாய்ப்பு கிட்டாததால் நான் முயற்சி குன்றி தூரத்தில் ஒதுங்கியிருந்தேன். உலகின் அன்னையின் கருணை எனும் காற்று காரணமின்றி எழுந்து வீச, அவளது கடைக் கண்களின் ஒளி வீச்சு அலையாய் எழுந்து என்னை நோக்கி வந்தது. அவற்றை நினைவில் கொள்கிறேன். (1)

आवेद्यतामविदितं किमथाप्यनुक्तं
वक्तव्यमान्तररुजोपशमाय नालम् ।
इत्यर्थ्यसे किमपि तच्छ्रवणे निधातुं
मातः प्रसीद मलयध्वजपाण्ड्यकन्ये ॥ २ ॥

தாயே ! நீ அறியாததையா நான் சொல்லப்போகிறேன். ஆஎல் சொல்ல வேண்டியதைச் சொல்லாதிருந்தால் உள்ளத்தில் சுமக்கிற வேதனை குறையாது. அதஞல் ஏதோ நான் கூற வருவதைக் காதில் வாங்கிக்கொள்ள வேண்டுகிறேன். மலயத்துவஜ பாண்டியனின் மகளே ! அருள்புரிவாய். (2)

आक्रन्दितं रुदितमाहतमानने वा
कस्यार्द्रमस्तु हृदयं किमतः फलं वा।
यस्या मनो द्रवति या जगतां स्वतन्त्रा
तस्यास्तवाम्ब पुरतः कथयामि खेदम्॥ ३॥

தாயே ! எனது கதறலாலும் புலம்பலாலும் முகத்தில் அடித்துக் கொள்வதாலும் எவரது உள்ளம் நெகிழும் ? அப்படி நெகிழ்ந்தாலும் என்ன நேரும் ? கருணையால் நெகிழ்கிற மனமுள்ளவளும் உயிரினமனைத்திற்கும் உதவத் தானே முன் வருபவளுமான தாயான உன் முன்னிலையில் என் துயரைத் தெரிவிக்கிறேன். (3)

पर्याकुले मनसि वाचि परिस्खलन्त्यां
आवर्तगर्त इव चक्षुषि घूर्णमाने।
कस्तेऽभिधास्यति शिवे मम तामवस्थां
काले दयस्व कथयामि तवाधुनैव॥ ४॥

மங்களவடிவினளே ! என் இறுதிநிலையில் மனம் குழம்பும். பேச்சு குளறும். கண் குழி விழுந்து பார்வை அலையும். அந்நிலையில் எனக்காக யார் உன்னிடம் விண்ணப்பிப்பார் ? அதனால் இப்போதே தெரிவித்துக் கொள்கிறேன். பரிவு காட்டுவாய். (4)

भक्तिं करोतु नितरां सुरजातिमात्रे
ग्रामीणजन्तुरिव पौरजनेषु लोकः।
अन्यत्र देवि भवदीयपदारविन्दाद्
आकृष्यमाणमपि मे हृदयं न याति॥ ५॥

தேவி ! உலகில் கிராமத்தான் பட்டினத்தானிடம் மரியாதை காட்டுவான். அது போல் மற்ற தேவர்களை அவர்கள் தேவர்களாக இருப்பதாலேயே சிலர் பக்தியுடன் அணுகக்கூடும். ஆனால் என் மனம் உன்னைவிட்டு வலிவில் அகற்றப்பட்டாலும் உன் திருவடிகளை விட்டகலாது. (5)

अङ्गीकुरु त्वमवधीरय वा वयं तु
दासास्तवेति वचसैव जयेम लोकान्।
एतावतैव सुकरो ननु विश्वमातः
उद्दण्डदण्डधरकिंकरमौलिभङ्गः ॥ ६ ॥

உலகின் அன்னையே ! நீ எங்களை ஏற்றுக் கொண்டாலும் உதறித் தள்ளினாலும் நாங்கள் உனது அடிமைகள். அவ்வாறு கூறிக்கொண்டே உலகை வெல்வோம். இத்தகைய பக்தியைக் கொண்டே யமகிங்கரர்களின் மண்டையை உடைப்பதும் எமக்கு மிக எளிது. (6)

वेदान्तवाक्यजनितं विमलं विचारैः
आसाद्य बोधमनुचिन्तनतोऽपरोक्षम्।
मुक्तिं व्रजन्ति मनुजा इति सूक्तिमाद्यां
आलम्ब्य कस्तरितुमर्हति शैलकन्ये ॥ ७ ॥

மலைமகளே ! உபநிஷத வாக்கியங்களைக் கற்று ஆராய்ந்து தெளிந்து தொடர்ந்து உள்ளத்தில் ஆத்மாவை உணர்வதால் மட்டுமே மாந்தர் முக்திபெறுவர் என்ற வேதவசனத்தைச் சொல்வதால் மட்டும் எவன் கடைத்தேற முடியும்? (அதனைச் செயல்படுத்துவது எளிதல்ல.) (7)

एकैकवेदविषयाः कति नाम शाखाः
तासां शिरांसि कति नाम पृथग्विधानि।
अर्थावबोधविधुरोऽक्षरलाभ एव
केषां नृणां कतिभिरस्तु शरीरबन्धैः ॥ ८ ॥

ஒவ்வொரு வேதத்திற்கும் கிளைகள் எத்தனை ? அந்த கிளைகளுக்கான உபநிஷதங்கள் எத்தனை ? அவற்றின் பொருளை உணராவிட்டாலும் எழுத்துக்களை மட்டும் கற்பதற்கே பிறவிகள் எத்தனையோ தேவை. (8)

न्यायाः परस्परविभिन्नदिशः सहस्रं
उच्चावचानि च भवन्त्युपबृंहणानि।
एवं स्थिते गिरिसुते निगमोपलानां
तात्पर्यसारमवधारयितुं क्षमः कः ॥ ९ ॥

மலைமகளே ! தத்துவ விளக்கத்திற்கான வாதங்கள் ஆயிரம் உண்டு. ஒன்றுக்கொன்று அவை முரண்படுபவை. அவற்றிற்கு உதவுகிற விளக்கங்கள் பல. வேதங்களும் பாறை போன்று கடினமானவை. அவற்றின் உட்கருத்தை உணரத்தகுதி பெற்றவர் எவர் ? (9)

अस्त्वक्षरग्रहविधिर्जनुषां सहस्रैः
आपाततो भवतु वापि ततोऽर्थबोधः।
दुर्वादिकल्पितविकल्पतरङ्गसान्द्रान्
दुष्पूर्वपक्षजलधीन् कथमुत्तरेयुः ॥ १० ॥

ஆயிரம் பிறவிகளை எடுத்து உழைத்து வாயால் சொல்லப் பழகிவிடலாம். அதன்பின் மேலெழுந்த வாரியாகப் பொருளும் அறியலாம். ஆனால் தவறான முறையில் ஐயமுறும்படி வாதித்துக் கிளப்பப்படுகிற எதிராளியின் வாதக் கடலை எப்படித் தாண்டுவது. ? (10)

ब्रह्मेति शक्तिरिति बन्धविमोचनीति
मायामयीति मदनान्तकवल्लभेति।
सप्ताष्टशब्दपरिवर्तनमात्र एव
सामर्थ्यमावहति शास्त्रपरिश्रमोऽयम् ॥ ११ ॥

பிரும்மம், சக்தி, ஸம்ஸாரக் கட்டிலிருந்து விடுவிப்பவள், மாயை வடிவினள், மன்மதனை அழித்தவரின் இனியாள் என்றவாறு ஏழெட்டுச் சொற் சிலம்ப மாடுவதையே சாஸ்திரப்பயிற்சி தோராயமாகத் தந்துள்ளது. (11)

तस्मै प्रसीदसि गिरीन्द्रसुते य इत्थं
संपादयेत शनकैरपरोक्षबोधम्।
यस्मै प्रसीदसि स च क्षमतेऽवबोद्धुं
इत्थं परस्परसमाश्रयमेतदास्ते ॥ १२ ॥

மலையரசரின் மகளே ! சிறுகச் சிறுக உன்னைப்பற்றி நேரிடை உணர்வைப் பெறுபவனுக்கு நீ அருள்புரிகிறாய் என்பர். உனது அருளைப் பெற்றவனே உன்னை உணரமுடியும் என்பர். இது ஒன்றையொன்று சார்ந்திருக்கும் நிலை அல்லவா ? (உன்னருளால் உன் தாள் பற்றலாம். உன் தாளைப் பற்றினால் உன் அருள் பெறலாமெனில் போகாத ஊருக்கு வழி இது). (12)

आकर्णय त्वमिममभ्युपगम्य वादं
जानातु कोऽपि यदि वा हृदयं श्रुतीनाम्।
तस्याप्यसंख्यभवबन्धशतार्जितोऽयं
द्वैतभ्रमो गलतु जन्मशतैः कियद्भिः ॥ १३ ॥

இதனை அப்படியே ஏற்கிறேன். எனினும் என் கருத்தைக் கேட்பாய். வேதங்களின் உட்கருத்தை ஒருவன் நன்கு உணர்ந்துள்ளான் என்றே கொள்வோம். ஆனால் அவனது எண்ணற்ற முற்பிறவிகளிலும் (இப்பிறவியில் இதுவரையிலும்) ஏற்ற பல உள் வாஸனைகள் தந்துள்ள ''நீ வேறு. நான் வேறு. அது இது வேறு'' என்ற துவைதக்குழப்பம் இன்னம் எத்தனை பிறவிகளில் நீங்கும்? (பல முன்பிறவிகளில் தொடர்ந்து வந்துள்ள அறியாமை நீங்க மீண்டும் பலதடவை பிறந்து நூலறிவுபெற வேண்டியிருக்குமே ?) (13)

काले महत्यनवधावपतन्कदापि
क्वाप्यन्तिमे जनुषि कोऽपि गतिं लभेत।
इत्थं समर्थनविधिः परमागमानां
पर्यायसूक्तिविधया नयनं नञर्थे ॥ १४ ॥

முடிவற்று, நீண்டகாலவரை வரை நன்னெறி தவருமல் வாழ்ந்து ஏதோ ஒரு கடைசிப்பிறவியில் ஒருவன் நன்னிலை பெறக் கூடும் என்ற சாஸ்திரவசனங்கள் (பல பிறவிகளை எடுத்தாலும் நன்னிலைபெற இயலாதென) மறைமுகமாக இயலாமையைக் கூறுவதாகும். (14)

एकापवर्गसमये जगतोऽपवर्गः
सर्वापवर्गसमये पुनरस्तशङ्कः ।
ईदृग्विधं कमपि पक्षमिहावलम्ब्य
स्थातुं सुखं क्षममनेन पथा प्रवृत्तैः ॥ १५ ॥

''நல்லறிவாளன் ஒருவன் ஜீவன்முக்தி பெறும்போது உலகில் மற்ற ஜீவர்களுக்கும் முக்தி கிட்டும். எல்லோருக்கும் முக்தி கிட்டும் என்பதில் ஐயமில்லை'' என்பர். இதனை நம்பி ஒருவர் அவரவர் வழி சென்று ஸுகமாக வாழமுடியலாம். (முக்தியடையத் தகுதி பெற்றவரைச் சார்ந்துவாழ்வதாலேயே அனைவரும் முக்தி பெறலாம். ஒவ்வொருவரும் சமம், தமம், ஆத்ம விசாரம், ஆத்மாவில் லயித்தல் முதலிய பயிற்சிகளில் ஈடுபடுவது அவசியமில்லை என்றவாறு இந்தவாதம் அமையும். இது சரியானதா ?) (15)

अभ्यस्य वेदमवधाय च पूर्वतन्त्रं
आलक्ष्य शिष्टचरितानि पृथग्विधानि ।
अध्यापनादिभिरवाप्य धनं च भूरि
कर्माणि मातरलसाः कथमाचरेयुः ॥ १६ ॥

தாயே ! வேதத்தைக் கற்றுத் தினமும் ஓதி, பூர்வ மீமாம்ஸை முதலியவையை ஒட்டி, அவனுக்குரிய கருமங்களின் செய்முறையையும் பின்விளைவையும் ஆராய்ந்து, தன் முன்னோர் சென்ற பாதையில் சென்று, ஓதுவித்தல், வேள்வி புரிவித்தல் முதலியவற்றுல் பெரும் பொருள் ஈட்டிப் பின் தான் வேள்வி புரியத் தொடங்கும்

போது சோர்வும் தளர்ச்சியும் அடைந்தவன் உரிய சடங்குகளைக் கருத்துடன் எவ்வாறு செய்வான் ? (சோர்வும் சோம்பலும் கொண்டவன் செயல் நேர்த்தியுடன் சடங்குகளைச் செய்ய இயலாதல்லவா ?) (16)

आयस्य तावदपि कर्म करोतु कश्चित्
तेनापि मातरधिकं किमिहानुभाव्यम्।
आस्ते सुखं य इह भारतवर्षसीम-
न्यास्ते स किञ्चिदित उत्तरतोऽपसृत्य ॥ १७ ॥

அவ்வளவு முயன்று ஒருவன் கருமங்களைச் செய்வதாகக் கொண்டாலும், அதனால் அவன் அதிகமாகப் பெறப்போவது என்ன ? பாரத வருஷத்தின் எல்லைக்குள் இம்மையில் பெறவிருக்கிற இன்பத்தைப் பாரத வருஷத்திற்கப்பால் வடக்கேயுள்ள மேலுலகில் குறிப்பிட்ட அளவிற்குள் (மறுமையில்) பெறுவது தானே. (ஸ்வர்கம் முதலியதில் வாழ்வதே கருமங்களின் பலன். இதே சுகம் இவ்வுலக எல்லையில் கிட்டும்.) (17)

कर्म त्यजेम यदि नूनमधः पतेम
यद्याचरेम न कदापि भवं तरेम।
कर्म त्यजेदिति चरेदिति च प्रवृत्ता
भावेन केन निगमा इति न प्रतीमः ॥ १८ ॥

உரிய கருமங்களைச் செய்யாவிடில் நிச்சயமாக தாழ்வைப் பெறுவோம். கருமங்களைச் செய்துவந்தால் அவற்றின் பின்விளைவான வினை நம்மைக் கட்டும்; பிறவிக் கடலைத் தாண்ட இயலாது. கருமங்களைச் செய்வாய் என ஒருபுறமும் கருமங்களை விட்டுவிடு என ஒருபுறமும் சாஸ்திரம் கூறுகிறது. ஏன் அவ்வாறு முரண்பட்ட உபதேசத்தைக் கூறுகிறது என்பது புரியவில்லை. (உரிய கருமங்களைச் செய்யாவிடில் பாபம். கருமத்தில் மூழ்கியிருந்தால் பிறவித்தளை நீங்காது என்று இருதலைக் கொள்ளி நிலை.) (18)

कर्मण्यकर्मविधिरेष यदाचरन्ति
कर्माणि तत्तदनुबन्धजिहासयेति।
सत्यं तथाप्यभिनवो भविता न बन्धः
प्राचीनबन्धहरणे क इवाभ्युपायः ॥ १९ ॥

கருமங்களின் பின்விளைவு எனும் விஷத்தொடர்பு நம்மைக் கட்டாமலிருக்க கருமங்களின் பின்விளைவில் பற்றின்றிச் செய்வாய். இது கருமத்தை அகர்மமாகச் செய்யும் வழி. அதன்படி இனி கருமங்கள் செய்யப்படும்போது புதிய வினைத்தொடர்பு இராது என்பது சரி. இதுவரை செய்த கருமங்களின் வினைக் கட்டிலிருந்து விடுபடுவது எப்படி ?

प्रारब्धकर्म कियदारभते कियद्वा
प्रारप्स्यते कियदिदं क इवावधत्ताम्।
कालः कियानिव मया प्रतिपालनीयो
यस्य क्षणार्धमपि कल्पशतत्वमेति ॥ २० ॥

முன்னிழைத்த வினைகளில் (ஸஞ்சிதத்தில்) பலன் தரத்தொடங்கிய வினைப்பகுதி (பிராரப்தம்) எந்த அளவு பலன் தந்துள்ளது ? எந்த அளவு மீதமுள்ளது (பிராரப்த சேஷம்) ? எந்தக் காலவரையில் அது பலன் தரவிருக்கிறது ? எத்தனை காலம் காத்திருப்பது ? காத்திருக்கும்போது நொடி கல்பகாலமாகுமே ? (ஆக வினை தீர வாய்ப்பே இராதே.)

पुंसः क्षणार्धमपि संसरणाक्षमस्य
सांख्यादयः सरणयो न विशन्ति कर्णम्।
संख्याय गाङ्गसिकताः सकलाश्च सूक्ष्माः
भुङ्क्ष्वेति वागिव महाक्षुधयार्दितस्य ॥ २१ ॥

பிறவித்தளையில் சிக்கி நொடி நேரம் கூட உழல இயலாதவனுக்கு ஸாங்கியம் முதலான சாஸ்திரங்கள் காட்டும் வழி பெரும்பசியால் வாடியவனிடம் கங்கை

மணல் அனைத்தையும் எண்ணிவிட்டு உடனே உண்ண வரலாம் என்பது போல் காதில் ஏறுது. (21)

भक्तिस्तु का यदि भवेद्रतिभावभेदः
तत्केवलान्वयितया विफलैव भक्तिः ।
प्रीतिस्त्वयि त्रिजगदात्मनि कस्य नास्ति
स्वात्मद्रुहो न खलु सन्ति जनास्त्रिलोक्याम् ।। २२ ।।

பக்தி என்பது என்ன ? அன்பால் ஈர்ப்பதும் ஈர்க்கப்பெறுவதும் அது எனில், அன்பும் ஈர்ப்பும் இல்லாத உயிரினமே இல்லை எனலாம். அதுவும் பலன் தராது. தேவி ! நீயே உலகனைத்தின் ஆத்மா. ஆத்மா தான் அன்புக்குரிய முதல் பொருள். உன்னிடம் அன்பில்லாதவன் ஆத்மதுரோகி. மூவுலகிலும் தன்னையே வெறுப்பவன் காணப்படமாட்டான். (22)

आत्मा समस्तजगतां भवतीति सम्यग्
विज्ञाय यद्धितनुते त्वयि भावबन्धम् ।
सा भक्तिरित्यभिमतं यदि सिद्धमिष्टं
व्यर्थं विशेष्यमलमस्तु विशेषणं नः ।। २३ ।।

உலகனைத்திற்கும் நீதான் ஆத்மா என்று நன்கறிந்து உன்னிடம் அன்பால் தன்னைப்பிணைத்துக் கொண்டவனின் நடைமுறையே பக்தி என்றுல் அது சரியே. அது எத்தகையது என ஆராய்வது வீணே. பக்தி என்றொரு உணர்வு என்றமட்டில் அதுபோதும். (23)

स्वात्मेतरत्वमवधार्य परत्वबुद्ध्या
यत्प्रीयते गुरुजनेष्विव सैव भक्तिः ।
स्यादेतदेवमियमेव तु मे जिहास्या
द्वैतभ्रमात्किमधिकं भवबन्धमूलम् ।। २४ ।।

தன்னைக் காட்டிலும் தைவம் வேறுபட்டதும் மேலானதும் எனக் கொண்டு பெற்றோர் குரு முதலானவரிடம் காட்டும் அன்பு போன்றது தான் பக்தி எனில் அது தவிர்க்கத்தக்கதே. தேவி வேறு, தான் வேறு என்ற துவைதக் குழப்பத்தைக் காட்டிலும் பிறவிச் சிறைக்குச் செல்ல உதவுவது வேறு உள்ளதா ? (24)

सेवैव भक्तिरिति कर्मपथप्रवेशः
सेव्यप्रसादफलका किल कर्मसेवा।
ध्यानप्रवाह इति चेच्छ्रवणात्तृतीयः
प्रागेव मातरयमाकलितोऽभ्युपायः ॥ २५ ॥

தாயே! வழிபடுவதே பக்தி எனில் அது கர்மமார்க்கத் தினுட்பட்டது. வழிபடப்பெறுபவரின் மனம் குளிரச் செய்வதே அதன் பலன். (வேலைக்கேற்ற கூலி என்ற எதிர்பார்ப்பு நிலை அது). அருவிபோல் இடையறாது தொடர்கிற தியானமே பக்தி எனில் அது ஞானமார்க்கத்தினுட்பட்ட சிரவணம், மனனம், நிதித் தியாஸனம் என்பவற்றில் மூன்றுவதான நிதித்தியாஸனம் தானே அது? முன்னமே அதுபற்றி ஆராயப்பட்டது. (25)

अत्रैव दास्यसि विमुक्तिमथापि याचे
मातः शरीरपतनं मणिकर्णिकायाम्।
अस्तु स्वकृत्यमनुकम्पनमीश्वराणां
दासस्य कर्मकरतैव तथा स्वकृत्यम् ॥ २६ ॥

தாயே ! இங்கேயே முக்தி தருவாய் எனில் உன்னிடம் மணிகர்ணிகையில் என் உடல் விழவேண்டும் என்று யாசிப்பேன். பிரபுக்களுக்குப் பணியாளரிடம் பரிவுகாட்டுவது கடமை. பணியாளனுக்கு பிரபுவுக்கு ஸேவை புரிவதே கடமை. (காசியில் மணிகர்ணிகை கட்டத்தில் மரிப்பவரின் வலது காதில் சிவன் தாரகமந்திரம் உபதேசிக்கிறார். அங்கு மரித்தாலே முக்தி.) (26)

सद्यो भवेत्सुकृतिनामुपदेशलाभः
पापात्मनां बहुतिथे समये व्यतीते।
इत्यादिभिः किल पुराणवचोभिरम्ब
वाराणसीमपि न याचितुमुत्सुकोऽस्मि ॥ २७ ॥

அங்கும் புண்ணியம் புரிந்தவருக்கு விரைவில் முக்தி. பாபிகளுக்கு வெகுநாட்கள் வசித்த பிறகே முக்தி கிட்டும். இவ்வாறு பல புராணவசனங்களால் காசியில் மரணத்தையும் யாசிக்க எனக்கு ஆர்வமில்லை. (27)

आक्रान्तमन्तररिभिर्मदमत्सराद्यैः
गात्रं वलीपलितरोगशतानुविद्धम्।
दारैः सुतैश्च गृहमावृतमुत्तमर्णैः
मातः कथं भवतु मे मनसः प्रसादः ॥ २८ ॥

தாயே ! கர்வம், பொறுமை முதலிய உள்ளத்து எதிரிகளால் மனம் கவரப்பட்டுள்ளது. மூப்பும் நரையும் நூற்றுக்கணக்கான நோய்களும் உடலினுள் இடம் பிடித்துள்ளன. மனைவியும் மக்களும் கடன் காரர்களாக வீடு முழுவதிலும் சூழ்ந்துள்ளனர். என் மனம் எவ்வாறு தெளிவுபெறும் ? (28)

धन्याः कति त्रिभुवने परमोपभोग्यं
संसारमेव परमेश्वरि भावयन्तः।
आभासरूपमवबोधमिमं समेत्य
क्लिश्ये कियत्कियदहं त्वमुना भवेन ॥ २९ ॥

பேராளுமை பெற்றவளே ! பிறந்து வாழ்வதையே மூவுலகிலும் மிகச்சிறந்த சுகானுபவமாகக் கருதுகிற பாக்கிய சாலிகள் பலர். அரைகுறை அறிவுபெற்ற நானே இப்பிறவியால் எத்தனை துன்பத்தை அனுபவிக்கிறேன். (29)

का संसृतिः किमपचारनिबन्धनेयं
कीदृग्विधस्य तव किं क्षतमेतयेति।
प्रश्ने तु नास्मि कुशलः प्रतिवक्तुमेव
खेदस्तु मे जननि कोऽप्ययमेवमास्ते ॥ ३० ॥

தாயே ! பிறவித்தளை என்பது என்ன ? எந்த செயலால் இது நேர்ந்தது ? எதனல் இது தீரும் ? எந்த நிலையில் உனக்கு இதனல் என்ன தீங்கு விளைந்தது ? இப்படிக் கேட்டால் விடைதர என்னல் இயலாது. ஏதோ ஒரு துன்பம் எனக்கு இவ்வாறு உள்ளது. (30)

एवं गतस्य मम सांप्रतमेतदर्हं
अत्रेदमौपयिकमित्थमिदं च साध्यम्।
अस्मिन्प्रमाणमिदमित्यपि बोद्धुमम्ब
शक्तिर्न मे भुवनसाक्षिणि किं करोमि ॥ ३१ ॥

உலகின் சாட்சியான தாயே ! ''இந்நிலையில் எனக்கு இப்போது இது ஏற்றது; இது உதவும்; இது நிறைவேறும்; இதனை இவ்வாறு நிறைவேற்றலாம்; இதற்கு ஆதாரம் இது'' என்று கண்டறியவும் எனக்குத் திறமை இல்லையே ! என் செய்வேன். (31)

न ज्ञायते मम हितं नितरामुपायो
दीनोऽस्मि देवि समयाच(क)रणाक्षमोऽस्मि।
तत्त्वामनन्यशरणः शरणं प्रपद्ये
मीनाक्षि विश्वजननीं जननीं ममैव ॥ ३२ ॥

எனக்கு இதமானது இது எனத் தெரியவில்லை. அதற்கு உதவக் கூடியதும் தெரியவில்லை. முறைப்படி உரியநேரத்தில் அதனைச் செய்யவும் இயலவில்லை. நான் இரக்கத்திற்கு உரியவன். வேறு புகலிடமில்லாதவன். மீனகூஷி ! உலகின் அன்னையும் எனது அன்னையுமான உன்னைச் சரணடைகிறேன். (32)

किञ्चिन्मया श्रुतिषु किञ्चिदिवागमेषु
शास्त्रेषु किञ्चिदुपदेशपथेषु किञ्चित्।
आघ्रातमस्ति यदतो भवतीं वरीतुं
गोप्त्रीति काचिदुदपद्यत बुद्धिरेषा॥ ३३॥

வேதங்களில் சிறிதளவும் ஆகமங்களில் சிறிதளவும் சாஸ்திரங்களில் சிறிதளவும், குருவின் உபதேசமுறைகளில் சிறிதளவும் முகர்ந்து பார்த்துள்ளேன். அதன் பயனுக நீ தான் காப்பாற்றுபவள் என்று கருதி உன்னைக் காப்பாளராக வரிக்கும் எண்ணம் உண்டானது. (இந்த சுலோகம் முதல் 49வது சுலோகம் வரை தேவியைச் சரணடைவதே வழி எனக்கண்டு சரணாகதிக்கான உபாயங்களைக் கையாளுகிறார். இறைவனைச் சரணடைய உதவுவதைப்பெற உறுதி, அதற்கு எதிரானவற்றைத் தவிர்ப்பது, காப்பார் என்ற நம்பிக்கை, நீதான் காக்கவேண்டும் என்று கோருவது, தனது வாழ்வின் பொறுப்பனைத்தையும் அவளிடம் ஒப்பிப்பது, தான் தனித்துச் செயல்பட இயலாதவன் என்று உணர்தல் என்று ஆறும் சரணாகதிக்கான உபாயங்கள்) (33).

ब्रह्मैवमेवमहमेष तदाप्युपायः
इत्यागमार्थविधुराः प्रथमे दयार्हाः।
त्वद्रक्षकत्वगुणमात्रविदो द्वितीयाः
इत्यर्थये सदधिकारनिरूपणाय॥ ३४॥

பரப்பிரும்மம் இத்தகையது, நான் இத்தகையவன், பிரும்மத்தை அடைய இது உபாயம் என்று பிரித்து ஆராய்பவர் வேதத்தின் உட்கருத்தை உணராதவரே. இவர்கள் முதலில் இரக்கத்திற்குரியவர். நீ காப்பவள் என்பதை மட்டும் அறிந்து உண்மை நிலை உணராதவர் இரண்டாவதாக இரக்கத்திற்குரியவர். உன் பரிவிற்குரிய சரியான நிலை எது என்பதை விளக்க வேண்டுகிறேன். (34)

मातः करोषि ममतां मयि यावदीषत्
तावद्यते मम ततः किमिवास्ति साध्यम्।
मामित्थमित्थमुपयुङ्क्ष्व न विस्मरेति
किं स्वामिनं त्वरयते कचन स्वभृत्यः ॥ ३५ ॥

தாயே ! என்னிடத்தில் நீ 'தன்னைச் சார்ந்தவன்' என்ற அபிமானத்தைச் சிறிது காட்டுமளவிற்கு நான் முயல்வேன். அதைவிடச் சாதிப்பதற்கு வேறு என்ன உள்ளது?'' என்னை இவ்வாறு இவ்வாறு பயன்படுத்திக் கொள்வாய்; என்னை மறந்து விடாதே'' என எங்காவது பணியாள் பிரபுவை வேண்டுவதுண்டா ! (35)

त्याज्यं त्यजानि विहितं च समाचराणि
नित्येषु शक्तिमनुरुध्य हि वर्तितव्यम्।
तद्बुद्धिशक्तिमनुरुध्य न कार्यशक्तिं
इत्येतदेव तु शिवे विनिवेदयामि ॥ ३६ ॥

தவிர்க்க வேண்டியதைத் தவிர்ப்பேன். செய்யவேண்டியதை நன்கு செய்வேன். ஆனால் தினசரிப்பணிகளில் என் சக்திக்கேற்ப நடக்கவேண்டி யுள்ளது. மங்களமானவளே ! எந்தச் செயலும் அவனவனது அறிவாற்றலுக்கேற்பத் தான் அமையும். காரியச்சிறப்பை ஒட்டி அல்ல. இதை மட்டும் உன்னிடம் தெரிவித்துக் கொள்கிறேன். (36)

आत्मैव भार इति तं त्वयि यो निधत्ते
सोऽङ्गानि कानि कलयत्वलसः प्रपत्तेः।
विश्वत्र साऽत्र तु विलक्षणलक्षणा या
विस्रम्भसंपदियमेव समस्तमङ्गि ॥ ३७ ॥

தன்னையே சுமை எனக் கருதி அதனை உன் பொறுப்பில் விடுபவன் சோம்பேறி. சரணமடைதலின் எந்த அங்கத்தை அவன் முழுவதாகச் செய்வான் ? ''அவள் எங்கும்

உள்ளாள். இங்கோ தனிச்சிறப்புடன் உள்ளாள் என்ற முழு நம்பிக்கையே எல்லா அங்கங்களின் முழு உருவம். அதுவே பிரதானமும் கூட. (विश्वत्र साऽत्रஎனுமிடத்தில் विश्वस्य साक्षिणि என்றபாடமுண்டு. உலகிற்கு ஸாக்ஷியாக நிற்பவளே !) (37)

त्वत्प्रेरणेन मिषतः श्वसतोऽपि मातः
प्रामादिकेऽपि सति कर्मणि मे न दोषः ।
मात्रैव दत्तमशनं ग्रसतः सुतस्य
को नाम वक्ष्यति शिशोरतिभुक्तिदोषम् ।। ३८ ।।

தாயே ! உன தூண்டுதலால் விழித்திருக்கிறேன்; மூச்சு விடுகிறேன். எனது செயல்தவருனதெனில் அதில் என் குறை ஏதுமில்லையே ! தாயால் கொடுக்கப்பெற்ற உணவை விழுங்குகிற சிசுவின் மீது அதிக அளவு உண்டுவிட்டான் என்ற குற்றம் சாராது. (38)

मुक्तिं सिसाधयिषतां निजयैव बुद्धया
प्रारब्धकर्म भवतु प्रतिबन्धहेतुः ।
त्वामेव साधनतयापि समाश्रितानां
तुल्यं तदम्ब यदि कस्तव वीरवादः ।। ३९ ।।

அணைத்துக்காப்பவளே ! தன் அறிவின் உதவி கொண்டு முக்திபெற முயல்பவனுக்கு பிராரப்தவினை இடையூருகலாம். உன்னையே ஸாதனமாகக் கொண்டவனுக்கும் அதே இடையூறு நேருமாஞல் உன் திறமைக்குப் பாராட்டு ஏது ? (39)

प्रारब्धकर्म गिरिजे भवदाश्रितानां
अन्यत्र संक्रमय नाशय वा समूलम् ।
मर्त्याश्च खल्वपि विषं वपुषि प्रसक्तं
संक्रामयन्ति परतोऽपि च नाशयन्ति ।। ४० ।।

மலைமகளே ! உன்னை அண்டியவர்களின் பிராரப்த கருமத்தின் மீதியை வேறு ஓரிடத்தில் மாற்றுவாய். அல்லது கருமத்தை வேருடன் அழிப்பாய். மாந்தரும் தன் உடலில் பரவிய விஷத்தை வேறு இடத்தில் இறக்கிவிடுவர், அல்லது வேருடன் அழிப்பர். (உன்னைச் சரணடைந்தவனிடம் பிராரப்த கருமம் ஒட்டாதபடி காப்பது உன் கடமை.) (40)

त्वद्दर्शनश्रवणवन्दनचिन्तनादि-
ष्वक्षाणि देवि विनियुज्य यथाधिकारम्।
रक्षेत्यसंख्यभवसंभृतयैव मैत्र्या
रुन्ध्यां यदि स्थिरममून्यधुनैव न स्युः ॥ ४१ ॥

உன்னைக் காண்பதிலும் உன்னைப்பற்றிக் கேட்பதிலும் உன்னை வணங்குவதிலும் நினைப்பதிலும் என் புலன்களைத் தகுதிக்கேற்பப் பயன்படுத்திப் பல பிறவிகளில் சேமித்த நட்புணர்வுடன் காப்பாற்றுவாய் என உன்னை வற்புறுத்தினேனுகில் அப்போதே பிராரப்த வினைகள் வலிவிழந்து நழுவிவிடும். (41)

त्रातव्य एष इति चेत्करुणा मयि स्यात्
त्रायस्व किं सुकृतदुष्कृतचिन्तया मे।
कर्तुं जगत्तिरयितुं च विभूङ्कलायाः
कर्मानुरोध इति कं प्रति वञ्चनेयम्॥ ४२ ॥

இவன் காப்பாற்றப்படவேண்டியவன் என்று என்னிடம் கருணையிருந்தால் காப்பாற்று. என் புண்ணியத்தையும் பாபத்தையும் கருத்தில் ஏன் கொள்கிறாய்? உலகைப்படைக்கவும் மறைக்கவும் தடையின்றிச் செயல்படுகிற நீ வினையை ஒட்டி நடப்பேன் என்பது யாரிடம் புரிகிற ஏமாற்றுதல் ? (42)

त्वय्यर्पितं प्रथममप्पययज्वनैव
स्वात्मार्पणं विदधता स्वकुलं समस्तम्।

का त्वं महेशि कुलदासमुपेक्षितुं मां
को वानुपासितुमहं कुलदेवतां त्वाम् ॥ ४३ ॥

முதலில் தன்னை உனது பொறுப்பில் ஒப்படைத்த அப்பய தீக்ஷிதர் (என் பெரிய பாட்டனார்.) (ஆத்மார்பணஸ்துதியில்) பின்னர் தன் வம் சத்தினரனைவரையும் ஒப்படைத்துள்ளார். மஹேச்வரியே ! குல அடிமையான என்னைப் புறக்கணிக்க உனக்கேது உரிமை ? குலதெய்வமான உன்னை வழிபடாமலிருக்க என்னாலும் இயலாதே. (43)

मौढ्यादहं शरणयामि सुरान्तरं चेत्
किं तावता स्वमपि तस्य भवामि मातः ।
अज्ञानतः परगृहं प्रविशन्परस्य
स्वत्वं प्रयास्यति पशुः किमु राजकीयः ॥ ४४ ॥

தாயே ! அறியாமையால் நான் வேறு தேவனைச் சரணடைந்தேன் என்றாலும் அதனால் நான் அவனது உரிமைப் பொருளாகிவிடமுடியுமா ? அரசனின் பசு அறியாமையால் குடிமகனின் கொட்டிலினுள் நுழைந்ததால் அது அவனது உரிமைப்பொருளாகி விடுமா ? (44)

आधाय मूर्धनि वृथैव भरं महान्तं
मूर्खा निमज्जथ कथं भवसागरेऽस्मिन् ।
विन्यस्य भारमखिलं पदयोर्जनन्या
विस्रब्धमुत्तरत पल्वलतुल्यमेनम् ॥ ४५ ॥

அறிவிலிகளே ! பெருஞ்சுமையை வீணே தலையில் சுமந்து பிறவிக்கடலில் ஏன் மூழ்கிறீர்கள் ? தாயின் திருவடிகளில் அச்சுமையை இறக்கிவைத்துவிட்டு நம்பிக்கையுடன் பிறவிக்கடலைச் சிறு குட்டையைப் போல் எளிதில் தாண்டுவீர். (45)

केदं पतिष्यति वपुः क ततो नु गम्यं
को दण्डयिष्यति कियन्तमनेहसं वा।
किं तस्य संतरणसाधनमित्यनन्ता
चिन्ता स्थिता त्वयि शनैरवतारिता सा॥ ४६॥

எங்கே இந்த உடல் விழும் ? அதன் பின்பு எங்கு செல்லவேண்டியிருக்கும் ? எவர் என்னைத் தவற்றுக்குத் தண்டிப்பார் ? அந்த தண்டனை எத்தனை நாட்களுக்கு ? அவற்றைக் கடப்பது எப்படி ? இந்த முடிவு காண இயலாத கவலை அனைத்தையும் இன்று உன்னிடம் மெள்ள இறக்கிவைத்து விட்டேன். *(46)*

ज्ञानं दिशेयमुत तेन विनोद्धरेयं
प्रारब्धमप्यपलपेयमुतानुरुन्ध्याम्।
इत्थं सकृत्प्रपदनैकवशंवदायाः
मातुर्मयि (मातर्मयि) प्रववृते महतीह चिन्ता॥ ४७॥

தாயே ! ''இவனுக்கு ஜ்ஞானத்தை அருளட்டுமா ? ஜ்ஞானம் தராமலே கரையேற்றட்டுமா ? பிராரப்த வினையை மறைத்துவிடட்டுமா? அதை அனுசரிக்கட்டுமா?'' என்ற பெருங்கவலை தாயான உனக்கு இப்போது என் விஷயத்தில் ஏற்பட்டுள்ளது. ஆஹா உன்னை ஒரே ஒருதடவை மட்டும் சரணமடைந்துள்ளதை யொட்டி நீஎன்னைப்பற்றிய சிந்தனையின் வசப் பட்டுள்ளாய். *(47)*

एतज्जडाजडविवेचनमेतदेव
क्षित्यादितत्त्वपरिशोधनकौशलं च।
ज्ञानं च शैवमिदमागमकोटिलभ्यं
मातुर्यदङ्घ्रियुगले निहितो मयात्मा॥ ४८॥

தாயின் திருவடியில் என் ஆத்மா என்னால் வைக்கப்பட்டது. அதுவே ஜடப்பொருளையும்

சேதனப்பொருளையும் பகுத்து ஆராய்வதாயிற்று. பூமி முதலிய தத்துவங்களின் பரிசோதனையில் திறமையாயிற்று. கோடி ஆகமநூல்களை ஆராய்வதால் ஏற்பட்ட பர சிவஜ்ஞானமுமானது. *(48)*

षट्त्रिंशदावरणमध्यजुषि त्वदङ्घ्री
हालास्यनाथदयिते निहितो मयात्मा।
भूभूतलत्रिदिव (दश) वर्तिषु कः क्षमेत
तच्चक्षुषाऽपि निभृतेन निरीक्षितुं माम् ॥ ४९ ॥

ஹாலாஸ்யம் எனும் மதுரை க்ஷேத்திரத்தின் நாதரான ஸுந்தரேச்வரரின் இனிய மனைவியே ! முப்பத்தாறு தத்வங்களாலான ஆவரணங்களின் நடுவே அமர்ந்துள்ள உனது திருவடியில் என் ஆத்மா என்னால் வைக்கப்பட்டது. பூமி, பாதாளம், ஸ்வர்கம் என்ற மூவுலகிலும் வசிப்பவர் எவரும் என்னை ரகசியமாகக்கூடக் கண்ணால் காண முடியாது. *(49)*

बन्धं हरिष्यसि सुखं वितरिष्यसीति
निश्चप्रचं निखिलमम्ब तदास्त एव।
संप्रत्यहं त्वयि निधाय भरं समस्तं
यन्निर्वृणोमि किमितोऽपि ममापवर्गे ॥ ५० ॥

அன்னையே ! நீ வினைக்கட்டை நீக்கி ஆனந்தத்தைத் தருவாய் என்பது நிச்சயமே. இப்போது நான் சுமை அனைத்தையும் உன்னிடம் இறக்கி வைத்துவிட்டு நிம்மதியாயுள்ளேன். இதைவிட முக்தியில் என்ன உள்ளது ? *(50)*

काश्यां निपातय वपुः श्वपचालये वा
स्वर्गं नय त्वमपवर्गमधोगतिं वा।
अद्यैव वा कुरु दयां पुनरायतौ वा
कः संभ्रमो मम धने धनिनः प्रमाणम् ॥ ५१ ॥

நீ என் உடலைக் காசியில் கொண்டு வைப்பாயோ அல்லது நாயையடித்து உண்கிற கீழ்மகனின் வீட்டில் தள்ளுவாயோ. ஸ்வர்கம் கொண்டு செல்வாயோ, முக்தி தருவாயோ அல்லது நரகத்தில் தள்ளுவாயோ. இதில் நான் குழம்புவது அவசியமில்லை. சொத்து விஷயத்தில் சொத்துக் காரனுக்குத் தானே பொறுப்பு ? (உன் விருப்பப்படி பங்கிடு செய். அது உன் பொறுப்பு). (51)

नाहं सहे तव कथाश्रवणान्तरायं
नाहं सहे तव पदार्चनविच्युतिं वा।
मोक्षं दिशैतदविरुद्धमिदं न चेत्स्यात्
नैवास्तु मातरपवर्गमहोपसर्गः ॥ ५२ ॥

தாயே ! உன் கதை கேட்பதற்கு இடையூறு நேர்வதையும் பொறுக்கமாட்டேன். உன் திருவடிகளை வழிபடுவதற்கான வாய்ப்பு நழுவுவதையும் பொறுக்க மாட்டேன். இவற்றிற்கு இடையூருக இல்லாதிருந்தால் மோக்ஷத்தைத் தருவாய். மோக்ஷம் இடையூருஞல் அது வேண்டவே வேண்டாம். (52)

आचूडमाचरणमम्ब तवानुवारं
अन्तः स्मरन्भुवनमङ्गलमङ्गमङ्गम्।
आनन्दसागरतरङ्गपरम्पराभिः
आन्दोलितो न गणयामि गतान्यहानि ॥ ५३ ॥

(இது வரை தேவியை அணுகும் முறைகளைப் பரிசீலித்துச் சரணாகதியை உபாயமாக ஏற்ருர். இனி தான் இதுகாறும் கண்டானந்தித்த தேவியின் அழகுவடிவை பாதம் முதல் கேசம் வரை கவியாகி உத்ப்ரேக்ஷையும் சிலேடையும் மற்ற அலங்காரங்களும் காட்டி வர்ணிக்கிருர்.)

அம்பிகையே ! தலை முதல் திருவடிவரை உலகிற்கு மங்களமளிக்கிற உனது ஒவ்வொரு அங்கத்தையும் இடையருது உள்ளத்தில் பதித்து ஆனந்தக் கடலின்

மோதுகிற அலைவரிசைகளின் மீது ஊஞ்சலாடுகிறேன். கடந்த காலவரையை நான் சற்றும் உணரவில்லை. (53)

पाषाणतोऽपि कठिने शिरसि श्रुतीनां
प्रायः परिभ्रमवशादिव पाटलाभम्।
अम्ब स्मरेयममृतार्णवमन्थलब्ध-
हैयंगवीनसुकुमारमिदं पदं ते ॥ ५४ ॥

திருவடிகள்- பாறுங்கல்லைவிடக் கடினமான உபநிஷத்துகளில் அதிகம் உலாவுவதால் அவை சிவந்தன போலும். அமுதக் கடலைக் கடைந்தெடுத்த வெண்ணெய் போல் மென்மைமிக்க அந்த பாதத்தைத் தியானம் செய்கிறேன். (54)

ये नाम सन्ति कतिचिद्भुवस्त्रिलोक्यां
तेषामपि स्वयमुपेतवता गुरुत्वम्।
पादेन मूर्ध्नि विधृतेन वयं तवाम्ब
संसारसागरमिमं सुखमुत्तरामः ॥ ५५ ॥

அன்னையே ! மூவுலகிலும் கனத்த (பெருமை மிக்க) பெரியோர்களைவிட கனம் (பெருமை) மிக்க உன் திருவடியைத் தாங்கிய நாங்கள் இந்தப்பிறவிக்கடலை எளிதில் தாண்டுகிறோம். (குரு அறிவால் கனத்தவர் - பெரியவர். அவரைவிட கனத்தது- பெருமை மிக்கது உன் திருவடி. அதனால் பெரியோர் உன் திருவடியைத் தாங்குவர். கடலைக்கடப்பவன் கனத்த பொருளைச் சுமக்கமாட்டான். பக்தனே கனத்ததைத் தாங்கிக் கடலையும் சுகமாகத் தாண்டுகிறான்). (55)

साधारणे स्मरजये निटिलाक्षिसाध्ये
भागी शिवो भजतु नाम यशः समग्रम्।
वामाङ्घ्रिमात्रकलिते जननि त्वदीये
का वा प्रसक्तिरिह कालजये पुरारेः ॥ ५६ ॥

தாயே ! (கணவனின் இடப்பாதியைத் தன் உரிமையிடமாக நீ கொண்டுள்ளாய். நீ அர்த்த நரேச்வரீ, சிவன் அர்த்தநாரீச்வரர்.) நெற்றிக் கண்ணால் ஸாதிக்கப் பட்டதால் மன்மதனை வென்றதில் இருவருக்கும் சமப்பங்கு உள்ளதெனினும் பாதிப்பங்கு பெற்றிருப்பதால் சிவன் முழுப்புகழிற்கும் உரிமை பெறட்டும். (உன் பங்கான) இடது காலால் மட்டும் நிகழ்ந்த யமனை வென்றதில் திரிபுரம் எரித்தவருக்கு பங்கு ஏது ? (56)

स्यात्कोमलं यदि मनो मम विश्वमातः
तत्पादयोर्मृदुलयोस्तव पादुकास्तु।
स्यात्कर्कशं यदि करग्रहणे पुरारेः
अश्माधिरोहणविधौ भवत्पयोगः ॥ ५७ ॥

உலகின் அன்னையே ! என் மனம் மிக மென்மையுள்ளதெனக் கருதினால் மென்மை மிக்க உன் திருவடிகளுக்குப் பாதுகையாகட்டும். என் மனம் கடினமென எண்ணினால் திருமணத்தின் போது சிவபெருமான் உன் திருவடியை அம்மி மிதிக்கத்தூக்கி வைக்க ஏற்ற அம்மிக் கல்லாகட்டும். (57)

प्रस्निग्धमुग्धरुचिपादतले भवत्या
लग्नं दृढं यदिह मे हृदयारविन्दम्।
एषैव साग्रभुवनद्विशतीपतित्व-
साम्राज्यसूचनकरी तव पद्मरेखा ॥ ५८ ॥

உனது மிகவும் மென்மையும் அழகும் மிக்க உள்ளங்காலில் என் தாமரை போன்ற இதயம் நன்கு பதிந்துள்ளது. இதுவே இருநூற்றுக்கும் மேற்பட்ட (224) உலகங்களின் சக்கிரவர்த்தினியாயிருப்பதற்கான யோகத்தைச் சுட்டிக் காட்டுகிற தாமரை ரேகையாகியுள்ளது. (உள்ளங்காலில் தாமரை போன்ற ரேகை காணப்படுபவர் சக்கிரவர்த்தியாயிருப்பர்.)

अप्राकृतीं मृदुलतामविचिन्त्य किंचिद्
आलम्बितासि पदयोः सुदृढं मया यत्।
तन्मे भवार्णवनिमज्जनकातरस्य
मातः क्षमस्व मधुरेश्वरि बालकृत्यम्॥ ५९॥

தாயே ! மதுரையின் அரசியே ! இயல்பை மீறிய மென்மையும் அழகும் மிக்க உன்திருவடி நோகுமே என்று சிறிதும் எண்ணுமல் அவற்றைக் கெட்டியாகப் பற்றி யுள்ளேன். அதன் காரணம் பிறவிக்கடலைக் கடக்கையில் மூழ்கி விடுவோமோ என்ற பயம் தான். எனது இந்த சிறுபிள்ளைத்தனத்தைப் பொறுப்பாய். (59)

यत्रानमन्पशुपतिः प्रणयापराधे
मन्दं किल स्पृशति चन्द्रकलाञ्चलेन।
पुष्पार्चनेऽपि मृदितं पदयोर्युगं तत्
मातस्तुदन्ति न कथं परुषा गिरो मे॥ ६०॥

தாயே ! ஊடலால் நேர்ந்த தவற்றிற்காக உன் திருவடிகளில் வணங்குகிற சிவன் சந்திரகலையின் மென்மைமிக்க நுனியால் உன் திருவடியை வருடுகிறார். பூக்களைக் கொண்டு அர்ச்சனை செய்தாலே நோகின்ற உன் திருவடிகளை கரடுமுரடான வரண்ட எனது சொற்கள் மேலும் நோகச் செய்கின்றனவோ ! (60)

अव्याजसुन्दरमनुत्तरमप्रमेयं
अप्राकृतं परममङ्गलमङ्घ्रिपद्मम्।
संदर्शयेदपि सकृद्भवती दयार्द्रा
द्रष्टास्मि केन तदहं तु विलोचनेन॥ ६१॥

இயல்பாகவே அழகுமிக்கதும் எல்லாவற்றிற்கும் மேலானதும் அறிவிற்கு அப்பாற்பட்டதும் இயற்கையை மீறியதும் மிகவும் மங்களமுமான உன்

திருவடித்தாமரையை, தயையால் நெகிழ்ந்த நீ ஒருக்கணம் எனக்குக் காட்டக் கூடும். அப்படிக் காட்டினால் எந்தக் கண்ணால் பார்ப்பேன் ? (இயற்கைக்கு உட்பட்டதை இந்தப் பௌதிகக்கண் பார்க்கக்கூடும். தெய்வ அழகைக் காண இதனால் இயலாதே?) (61)

दिव्या दृशोऽपि दिविषद्ग्रहणोचितानि
वस्तूनि काममवधारयितुं क्षमन्ते ।
त्वन्मात्रवेद्यविभवे तव रूपधेये
त्वद्भाव एष शरणं परिशेषितो नः ॥ ६२ ॥

தெய்விகப் பார்வை கொண்ட கண்களைப் பெற்றாலும் அவை தேவர்களால் காணத்தக்கதை மட்டும் உணரக்கூடும். உன்னால் மட்டுமே காணத்தக்க பெருமை மிக்க உன் உருவத்தைக் காண, உன் நிலை பெறுதல் மட்டுமே வழியாகும். உன் உருவைக் காண உன் நிலை அருளாயோ ? (62)

अस्मिन्महत्यनवधौ किल कालचक्रे
धन्यास्तु ये कतिपये शुकयोगिमुख्याः ।
लीनास्त्वदङ्घ्रियुगले परिशुद्धसत्वाः
तानात्मनस्तव नखानवधारयामः ॥ ६३ ॥

எல்லையற்ற இந்தப் பெரிய கால வட்டத்தில் சுகர் முதலான யோகிகள் சிலரே தூய உள்ளத்தினராக உன் திருவடிகளில் லயமடைந்தனர். அவர்களே பாக்கியம் பெற்றவர்கள். அதனால் உன் கால்நகங்களாக உன்மீது பதிந்துள்ளனர் என நிச்சயிக்கிறோம். (63)

आशैशवान्ममतया कलितस्त्वयाऽसौ
आनृण्यमम्ब तव लब्धुमना मृगाङ्कः ।
स्वात्मानमेव नियतं बहुधा विभज्य
त्वत्पादयोर्विनिदधे नखरापदेशात् ॥ ६४ ॥

அன்னையே ! சிசுப்பருவத்திலிருந்து ''என்னைச் சேர்ந்தவன்'' என்று உன்னால் அபிமானத்துடன் வளர்க்கப்பெற்ற இந்த சந்திரன் உன்னிடம் கடன்பட்டதைத் தீர்க்கும் எண்ணத்தில் தன்னையே கண்டதுண்டமாக்கி நகங்கள் என்ற பெயரில் உன் திருவடிகளில் பதித்துள்ளான். (64)

नान्तः प्रवेशमयते किमपि श्रुतं मे
नास्तिक्यवादशिलया प्रतिरुध्यमानम्।
तत्पातयाम्यहमिमां महतीमधस्तात्
पादोदकेन कियता परदेवतायाः ॥ ६५ ॥

நாத்திகவாதம் என்ற பாறுங்கல்லால் அடைக்கப் பட்டதால் எந்த வேதச் சொற்களும் காது வழியே என் உள்ளத்தைச் சென்றடையவில்லை. பரதேவதையான உனது திருவடி கழுவிய நீரால் அந்தப் பாறையைநெகிழ்த்திக் கீழே வீழ்த்துவேன். (ஆற்றின் ஓட்டத்திற்குத் தடையாக உள்ள பெரும்பாறையை ஆற்றின் வேகம் உருட்டிச் சிதைத்து மணலாக்கிவிடும். நாஸ்திகவாதத்தால் ஏற்பட்ட தெய்வ நம்பிக்கையின்மை தேவியின் திருவடி கழுவிய நீரில் நீராட மறையும்). (65)

संनाहिभिर्यमभटैः परिवार्यमाणे
मय्यर्भके करुणया स्वयमापतन्त्याः।
आकर्णयेयमपि नाम विरामकाले
मातस्तवाङ्घ्रिमणिनूपुरशिञ्जितानि ॥ ६६ ॥

கணுக்கால்- தாயே ! ஆரவாரமிடுகிற யமனின் படைவீரர்கள் என்னைச் சூழும்போது, என்னிடம் பரிவால் என்னை நோக்கி ஓடிவருகிற உனது கால் சிலம்புகளின் ஒலியை என் இறுதிவேளையில் கேட்பேனே ? (66)

ब्रह्मेशकेशवमुखैर्बहुभिः कुमारैः
पर्यायतः परिगृहीतविमुक्तदेशम्।
उत्सङ्गमम्ब तव दास्यसि मे कदा त्वं
मातृप्रियं किल जडं सुतमामनन्ति ॥ ६७ ॥

மடி-இடுப்பு:- *அம்மா ! பிரும்மா, ஈசன், கேசவன் முதலிய உனது பல புதல்வர்கள் போட்டியிட்டு வரிசையாக உன் மடிமீது ஏறி அமர்ந்து இறங்குவர். அந்த உன் மடியை எனக்கு எப்போது தரப்போகிறாய் ? அசட்டுப்பிள்ளை தானே தாய்க்குச் செல்லப்பிள்ளை ! (67)*

ऊरौ शिरस्तव निवेश्य दयावितीर्ण-
संव्यानपल्लवसमीरविनीतखेदम्।
अत्रैव जन्मनि विभोः परमोपदेशं
आकर्णयेयमपि किं मणिकर्णिकायाम् ॥ ६८ ॥

பரிவால் எனது தலையை உனது தொடைமீது வைத்து உன் முந்தானையை வீசிக் களைப்பகற்றி மடிமீது கிடத்தி விசுவேச்வரனது உயர்ந்த ஞாலோபதேசத்தை மணிகர்ணிகையில் கேட்பதற்கு அருள்வாயா ? (68)

काञ्चीगुणग्रथितकाञ्चनचेलदृश्य-
चण्डातकांशुकविभापरभागशोभि।
पर्यङ्कमण्डलपरिष्करणं पुरारेः
ध्यायामि ते निखिलमम्ब नितम्बबिम्बम् ॥ ६९ ॥

தாயே ! அழகுவாய்ந்த உள்ளாடை, அதன்மீது தங்கத்தாலான பட்டாடை, அதன்மீது இடுப்பணியான காஞ்சி எனும் இறுகப்பிணைக்கிற மணியொலிக்கும் சங்கிலி, இவற்றுடன் சிவபெருமானின் சிறந்த மஞ்சத்தின் மீது உனது இடுப்பு சாய்ந்தமர்ந்துள்ளது. அதனைத் தியானிக்கிறேன். (69)

गर्भे निवेश्य भुवनानि चतुर्दशापि
संरक्षितुं कलितनिश्चित(श्चय)या भवत्या।
प्राकारमेव रचितं परितोऽपि नूनं
ऊहे सुवर्णमयमेदुरपट्टबन्धम्॥ ७०॥

பதிஞன்கு புவனங்களையும் கருவறையில் வைத்துக் காக்க நிச்சயம் செய்த உன்ஞல் தங்கமயமான பட்டியை அணிவதன்மூலம் சுற்றிப் பிராகாரமே அமைக்கப் பெற்றுள்ளது. இது நிச்சயம்.

मुक्ताश्च खल्वपि यदि त्रिपुरे भवत्याः
स्तन्याशया स्तनतटं न परित्यजन्ति।
अस्माकमुद्भटभवज्वरतापितानां
आर्द्रीभवन्तु वदनानि कुतो न हेतोः॥ ७१॥

மார்பு- திரிபுரங்களின் தலைவியே ! முக்தி பெற்றவரும் (முத்தாரத்தில் உள்ள முத்துகளும்) உன் மார்பின் மீது முலைப்பால் பருக விரும்பி மார்பகத்தை விட்டகலுவதில்லை. கொடிய பிறவித்தீயால் எங்களது வாய்களிலும் அந்தப்பாலை ஊட்டி ஈரப்படுத்தக் கூடாதோ? (முத்தாரத்தில் முத்துக்களும் மார்பை விட்டகலுவதில்லை. முக்தர்களும் அவ்வாறே. முக்தாः- முத்துக்கள் - முக்தி பெற்றவர்கள்.) (71)

नष्टोपलब्धमधिगत्य शिशुं चिरान्मां
वात्सल्यविद्रुतहृदः परदेवतायाः।
क्लिद्यत्पयोधरविनिःसृतदुग्धबिन्दु-
निष्यन्दपङ्क्तिरिव दीव्यति हारयष्टिः॥ ७२॥

எங்கோ கெட்டுத் தொலைந்திருந்த சிசுவான என்னைத் தேடிக் கண்டுபிடித்த பரதேவதையான உனக்கு என்னிடம் உள்ள பரிவால் உள்ளம் நெகிழ்ந்து பால் சொட்டு சொட்டாய் சுரந்து வெளியாகி முத்து முத்தாய் மார்பில் தெரிகிறது. அதுவே முத்தாரமாக விளங்குகிறது. (72)

यत्तद्धनुर्जनमनोमयमैक्षवं ते
तस्यास्तु देवि हृदयं मम मूलदेशः ।
चापाधिरोपणविधौ चरणाञ्चलेन
संभाव्यते किल समाक्रमणं कदाचित् ॥ ७३ ॥

ஆயுதங்கள்- தேவி ! மக்கள் மனமே உருவான உன் கரும்பு வில்லின் வேர்ப்பகுதியில் என் உள்ளம் நிலைக்கட்டும். அந்த வில்லை நாணேற்றும் போது சரணத்தின் நுனி வில்லின் கீழ்ப்பகுதியை அழுத்திப் பிடிக்கும். (73)

आस्थाय दारुणतरं कमपि स्वभावं
अत्यन्तदुष्कृतकृतामपि शिक्षणाय ।
गृह्णासि सायकपदे कुसुमान्यमूनि
मातः सुतेषु महती किल रूक्षतेयम् ॥ ७४ ॥

கொடிய செயலைச் செய்தவரை சிக்ஷிப்பதற்காக மிகக் கொடிய ஸ்வபாவத்தை ஏற்று இந்தப் புஷ்பங்களை அம்புகளாக எடுத்திருக்கிறயே ! தாயே ! உன் குழந்தைகளின் விஷயத்தில் இதுவும் கொடுமையே ! (74)

पाशं सृणिं च करयोस्तव भावयन्तः
संस्तम्भयन्ति वशयन्ति च सर्वलोकान् ।
चापं शरं च सकृदम्ब तव स्मरन्तो
भूपालतां दधति भोगपथावतीर्णाः ॥ ७५ ॥

அம்மா ! உலக சுகத்தை நாடுபவர் உன் இரு கைகளிலுள்ள பாசத்தையும் துறட்டியையும் உருவகப் படுத்தித் தியானித்து உலகனைத்தையும் ஸ்தம்பிக்கச் செய்து, வசப்படுத்துவர். போகத்தை நாடுபவர் வில்லையும் அம்பையும் தியானித்து அரசராவர். (75)

पाशाङ्कुशौ तव करे परिचिन्त्य राग-
द्वेषौ जयन्ति परमार्थविदस्तु धन्याः ।
एकत्र चापमितरत्र शरं च मत्वा
व्यावर्तयन्ति हृदयं विषयान्धकूपात् ।। ७६ ।।

தத்துவமுணர்ந்த பாக்கிய சாலிகள், பாசத்தையும் துறட்டியையும் உன் கைகளிலிருப்பதாகத் தியானித்து விருப்பு-வெறுப்புகளை வெல்கிறார்கள். ஒரு கையில் வில்லும் மற்றொருகையில் அம்பும் கொண்டவளாகத் தியானித்து வெளிப்பொருள் நாட்டமெனும் பாழும் கிணற்றிலிருந்து உள்ளத்தை மீட்கின்றனர். *(76)*

उत्क्रान्तमान्तरमिदं करणं जनानां-
अप्येति चन्द्रमिति हि श्रुतयो वदन्ति ।
आस्तामिदं मम तु देवि मनोऽधुनैव
लीनं दृढं वदनचन्द्रमसि त्वदीये ।। ७७ ।।

முகம்- மக்களின் உயிர் நீங்கியதும் உள்ளம் சந்திரனைச் சென்றடைவதாக வேதங்கள் கூறுகின்றன. இது சரியானதாக இருக்கட்டும். தேவி ! என் மனமோ இப்போதே உன் முகமாகிய சந்திரனிடம் நன்குலயமடைந்துவிட்டது. (மனம் எனும் தத்துவத்தின் அதிதைவம் சந்திரன். உடலுடன் உறவுபெறுத மனம் தன் மூலப்பொருளிடம் சென்றடங்குகிறது). *(77)*

विद्यात्मनो जननि तावकदन्तपङ्क्तेः
वैमल्यमीदृगिति वर्णयितुं क्षमः कः ।
तत्संभवा यदमला वचसां सवित्री
तन्मूलकं कवियशोऽपि ततस्तरां यत् ।। ७८ ।।

தாயே ! உன் பற்கள் 32 வித்யாஸ்தானங்களின் உருவகம். அவற்றின் தூய்மையை இத்தகையதென வர்ணிக்க இயலாது. அவற்றில் தோன்றிய ஸரஸ்வதி

அப்பழுக்கற்றவள். அவளது அருளாலான கவிகளின் புகழ் அவளைவிடத் தூய்மை மிக்கது. (தூய்மையின் நிறம் வெண்மை). (78)

स्वच्छापि ते वहति यत्किल दन्तपङ्क्तिः
स्वच्छन्दनिर्दलितदाडिमबीजशोभाम्।
तन्मे रजोव्यतिकराधिकपाटलिम्नि
चित्ते परं परिचयादिति चिन्तयामि॥ ७९॥

உன் பல் வரிசை தூய வெண்ணிறம் கொண்ட தெனினும் தானே முதிர்ந்து வெடித்த மாதுள விதைகளின் செம்மை கலந்தது. ரஜோகுணக்கலப்பால் அதிகம் சிவந்த என் மனத்துடன் அதிகத் தொடர்பால் அந்தச் செம்மை பரவியது என நினைக்கிறேன். (எகிறுகளின் செம்மையும் உதடுகளின் செம்மையும் பற்களில் பிரதிபலிக்கின்றன.) (79)

अर्धं जितत्रिपुरमम्ब तव स्मितं चेद्
अर्धान्तरेण च तथा भवितव्यमेव।
तच्चिन्तये जननि कारणसूक्ष्मरूप-
स्थूलात्मकत्रिपुरशान्तिकृते स्मितं ते॥ ८०॥

அன்னையே ! உன் சிரிப்பின் பாதி திரிபுரத்தை வென்றது. (சிவன் சிரித்துத் திரிபுரத்தை அழித்தார்.) மற்றொரு பாதியும் அத்தகையதாகவே இருக்கவேண்டும். அதனால் எனது காரண சரீரம், ஸூக்ஷ்மசரீரம், ஸ்தூல சரீரம் என்ற முப்புரங்களையும் வெல்ல உன் புன் சிரிப்பைத் தியானிக்கிறேன். (80)

मत्क्लेशदर्शनपरिद्रवदन्तरङ्ग-
हैयङ्गवीनपरिवाहनिभं जनन्याः।
अन्तस्तमोऽपहमनुस्मरतां जनानां
मन्दस्मितं तव तु मङ्गलमस्तु भूत्यै॥ ८१॥

எனது துயரத்தைக் கண்டு உள்ளம், உருகிய வெண்ணெய் போலாகிப் பெருகிவெளிப்படுவது போன்ற தாயான உனது புன் சிரிப்பு தன்னைத் தொடர்ந்து நினைக்கிற மக்களின் உள்ளத்து இருட்டை அகற்றி எனக்கு மங்களம் தரட்டும். (81)

सांसिद्धिकाननसरोरुहदिव्यगन्ध-
सान्द्रीकृतेन्दुशकलाकलिताधिवासम्।
ताम्बूलसारमखिलागमबोधसारं
मातर्विधेहि मम वक्त्रकलाचिकायाम्॥ ८२॥

தாயே ! உன் முகத்தாமரையின் தெய்விக நறுமணம் இயல்பாகவே அமைந்தது. அந்த நறுமணத்துடன் நெகிழ்ந்த அதில் பச்சைகர்பூரமணம் கலந்த தாம்பூலக் கலவையின் மணம் கலந்தது. அந்த மணமிக்க தாம்பூலச் சாற்றை என் வாயாகிற வட்டிலில் உமிழ்வாயாக. அது வேதங்கள் அனைத்தின் ஜ்ஞானமாகிய அமுதமல்லவா ? (82)

नासामणिस्तव शिवे चिरसंस्तवेन
प्रत्याहृते मनसि भाति तपोधनानाम्।
अज्ञानसंततिनिशात्ययसूचनार्थं
आविर्भवन्त्यसुरदेशिकतारकेव॥ ८३॥

மங்களமானவளே ! வெகுநாட்களாகப் பெற்ற யோகப் பயிற்சியால் மனமடங்கிய முனிவர்களின் உள்ளத்தில் உன் மூக்குத்தி பதிந்துள்ளது. அறியாமையின் தொடராகிய இருள்மிக்க இரவு முடிந்து விட்டதை அறிவிக்கிற விடி வெள்ளியோ (சுக்ரனோ) அது என எனக்குத் தோன்றுகிறது.

ताम्बूलगर्भपरिफुल्लकपोललक्ष्य-
ताटङ्कमौक्तिकमणिप्रतिबिम्बदम्भात्।
अस्तद्वयव्यतिकरामलसत्त्वमाद्यं
वर्णं बिभर्ति जठरे तव वक्त्रबिम्बम्॥ ८४॥

தாம்பூலம் நிறைந்துள்ளதால் உப்பிய கன்னத்தில் காதணியின் முத்துமணி பிரதிபலிக்கிறது. எல்லா ஒலிகளுக்கும் முதலில் தோன்றிய ஓம் என்ற எழுத்தை உன்முகம் தன் வயிற்றில் தாங்குகிறதோ ? அந்த ஓங்காரம் அத்வைத நிலையின் தூய வடிவமல்லவா ? (84)

दत्ते श्रियं बहुविधां कुशलानि दत्ते
दत्ते पदं सुरपतेरपि लीलयैव ।
ईदृग्विधाऽम्ब तव दृष्टिरितोऽधिका वा
नाद्यापि कर्णमतिवर्तितुमीश्वरीयम् ॥ ८५ ॥

தாயே ! உனது கடைக்கண்பார்வை செல்வத்தை வழங்குகிறது. நல்வாழ்வை அளிக்கிறது. இந்திரனின் பதவியையும் எளிதாகத் தருகிறது. இத்தகையதும், ஏன், இதைவிட அதிகமாக அருள்புரிவதுமான உன்பார்வை காதை (கர்ணத்தைத்) தாண்டிச் செல்ல முடியாது. (காதளவு நீண்ட கடைக்கண்பார்வை-காதுகளைத் தாண்டாது. கர்ணன் கொடையில் புகழ் பெற்றவன். உன் புகழ் அவன் புகழை விஞ்சாதோ எனச் சிலேடை) (85)

पाषाणकूटकठिने जनदुर्विगाहे
व्यर्थं महत्युपनिषद्विपिने प्रवृत्ता ।
सेव्येत केन तव लोचनचन्द्रिकेयं
एनां निपातय सकृन्मयि तप्यमाने ॥ ८६ ॥

கற்குவியல் போன்று கடினமான தடமுள்ளதும் மக்களால் எளிதில் நுழைய முடியாததுமான உபநிஷத் என்ற பெருங்காட்டில் வீணே பாய்கிற பார்வையாகிற நிலவு எவருக்கும் பயன்படாதே. (உபநிஷதக் காட்டில் அவள் விளையாடுபவள்- உபநிஷதுத்யான கேலிகலகண்ட்டீம்'' என்பார் காளிதாஸன்). அதற்குமாறுகக் தவிக்கின்ற என் மீது ஒரு கணம் படரட்டுமே ? (காட்டில் விழுகிற நிலவொளி வீணுகிறது. உபநிஷத் என்ற காட்டில் என்னைப் போன்றவர்

தடம்பதிக்க இயலாது. பாறை போன்ற வரட்டு ஜ்ஞானிக்கு தேவியின் மென்மை எனும் நிலவொளியை அனுபவிக்க இயலாது. என்னைப் போன்ற எளியவன் மீது உன் பார்வை எனும் நிலவொளி பாயட்டுமே ?)(86)

कामं शिवेन शमितं पुनरुज्जगार
दृष्टिस्तवेति किमियं जननि स्तुतिस्ते।
लीलाप्रसूतपुरुषार्थचतुष्टयायाः
तस्याः परं तु स भवत्यवयुत्यवादः ॥ ८७ ॥

தாயே ! சிவனுல் அழிந்த மன்மதனை (காமத்தை) உன் கடைக் கண்பார்வை உயிர்ப்பித்தது என்பது முழுமை பெற்ற பாராட்டு மொழியல்ல. விளையாட்டாகவே தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் என்ற நாடத்தக்கதனைத்தையும் தந்தருள்கிற உன் பார்வையை காமம் ஒன்றை மட்டும் தருவது என்பது உள்ளதைக் குறைத்துக் கூறுவதாகாதா ? (87)

सोमो जगज्जनयितेति यदाह वेदो
नेदं लतापरमिति भ्रमितव्यमार्यैः।
यः शैववामतनुवर्तिभवद्दृगात्मा
चन्द्रो जगत्सृजति तत्पर एष वादः ॥ ८८ ॥

ஸோமன் உலகைத் தோற்றுவித்தவன் என வேதம் கூறும். அந்த ஸோமன் என்பது ஸோமலதை என்ற கொடி என்று பெரியோர் குழம்ப வேண்டியதில்லை. சிவனது இடது பக்கத்திலமர்ந்த உனது கண்ணுகிய சந்திரனே உலகைப்படைப்பவன். அவனையே ஸோமன் என வேதம் கூறுகிறது. (ஸோமः- இடது கண்ணுக உமையிடம் உள்ளவன்.) (88)

सूच्यग्रवद्वसुमतीमणुवच्च मेरुं
दृष्टिर्यदम्ब तव पश्यति दानशौण्डा।
दृष्टास्त्वया वयमपीह ततः स्मरामो
वेशन्तमेव भवसागरमुत्तरङ्गम् ॥ ८९ ॥

தாயே ! தானம் வழங்குவதில் தேர்ந்த உன் பார்வை பூமியை ஊசிமுனையளவிலும் மேருவை அணுவளவிலும் பார்க்கிறது. அந்தப் பார்வையில் பட்ட நாங்களும் அலைமோதுகிற பிறவிக்கடலை சிறுகுட்டையாக எண்ணுகிறோம். (தேவியின் பார்வை பூமி முழுவதையும் ஒருவனுக்கு அளிக்கும். ஆனால் ஊசி முனையளவு கொடுத்ததாக நினைக்கும். அந்தப் பெருவள்ளல் தன்மைபெற்ற பார்வை எம்மீது பட்டதால் கடலைக் குட்டையாக மதிக்கிறோம்.) (89)

वाणीनिकेतनतया घनसारगौराः
कङ्कारकेसररुचः कमलानुषङ्गात्।
मातर्जयन्ति शरणागतलोकचेतो-
मालिन्यमार्जनवशादसिताः कटाक्षाः ॥ ९० ॥

உன் கடைக்கண் பார்வைகள் ஸரஸ்வதியின் இருப்பிடமானதால் கர்பூரம் போன்று வெண்ணிறம் கொண்டுள்ளன. லக்ஷ்மியுடன் சேர்ந்ததால் செவ்வல்லிக் கோது போல செம்மை கொண்டவை. தன்னைச் சரணடைந்தவரின் உள்ளத்து மாசைத் துடைப்பதால் கருமை கொண்டவை. இத்தகைய கடைக்கண்பார்வை மிக அழகாக உள்ளது. (வெண்மை செம்மை கருமை என்ற கண்ணின் நிறம் பார்வையில் வெளிப்பட்டு அறிவையும் செல்வத்தையும் தூய்மையையும் தருகிறது.) (90)

आकर्णमुल्लसति मातरपाङ्गदेशे
कालाञ्जनेन घटिता तव भाति रेखा।
शैवालपङ्क्तिरिव संततनिर्जिहान-
कारुण्यपूरपदवीकलितानुबन्धा ॥ ९१ ॥

தாயே ! காது வரை நீண்ட உன் கடைக்கண் பகுதியை ஒட்டிக் கருத்தமையாலிட்ட கோடு தெரிகிறது. எப்போதும்

பெருகுகிற கருணை வெள்ளத்தில் கரும்பாசிவரிசை போல் அது காணப்படுகிறது. (91)

विश्वं सृजत्यवति हन्ति च यत्कटाक्षो
विश्वस्यतां कथमसौ चपलस्वभावः ।
एषोऽपि यामनुसरल्लँभते यशांसि
तामेव विश्वसिमि देवि तवानुकम्पाम् ।। ९२ ।।

உன் கடைக்கண்பார்வை உலகைப் படைக்கிறது; காக்கிறது; அழிக்கிறது. நிலையற்று இயங்கும் இயல்புள்ள இதனை எப்படி நம்புவது ? தேவி ! இந்தப்பார்வையும் உன் தயையைப் பின்பற்றித் தான் புகழ்பெறுகிறது. உன் கண்களில் ததும்பிநிற்கிற அந்தத் தயையையே நான் நம்புகிறேன். (92)

अर्धं कलङ्करहिता करुणैव शंभोः
अर्धं गुणास्तदितरे सकलाः समेताः ।
इत्यम्ब संप्रति किल स्फुरितं रहस्यं
संपश्यतो मम भवन्मयमैशमर्धम् ।। ९३ ।।

நீயாகக் காணப்படுகிற உடலின் பாதியையும் சிவனுகத் தெரிகிற உடலின் பாதியையும் உற்றுநோக்கிய எனக்கு ஒரு ரஹஸ்யம் புரிந்தது. சிவனது அப்பழுக்கற்ற கருணை நீயாகிய பாதி உடல். மற்ற குணங்களனைத்தும் சிவனுகியபாதி. (கருணையின் நிறம் சிகப்பு. குணங்களின் நிறம் வெளுப்பு. அர்த்தநாரீச்வர நிலையில் இடது பகுதி சிவந்தது. வலப்பகுதி வெண்ணிற முள்ளது.) (93)

अम्ब भ्रुवोस्तव विचेष्टितमप्रमत्तं
संपश्यतां निजनिजार्थनिदेशहेतोः ।
तन्मूलदेशनिहिता निभृता सुराणां
दृष्टिः प्रयाति मृगनाभिविशेषकत्वम् ।। ९४ ।।

அன்னையே ! உன் புருவங்களின் அசைவு விதவிதமான தேவர்களுக்கான அவரவரது பணிகள் பற்றிய உத்தரவாகும். தம் தமது பணிக்குரிய உத்தரவென கவனக்குறைவின்றி உற்றுநோக்குகிற தேவர்களின் பார்வை குவிந்து புருவங்களின் கூடுமிடமாகிய நடுப்பகுதியில் அசைவற்றுப் பதிகின்றன. அவையே கஸ்தூரியாலான திலகமாகின்றன. (94)

सारं कणं कणमघर्मरुचां सहस्रात्
संगृह्य निर्मितमिदं तव वक्त्रबिम्बम् ।
तावत्सुधाकरकलङ्ककुलानि पश्चाद्
अन्यत्र देवि निहितानि कचापदेशात् ।। ९५ ।।

தேவி ! குளிர்ந்த கிரணங்களுள்ள ஆயிரம் சந்திரர்களின் ஸாரத்தைச் சேமித்து உன் முகம் அமைக்கப்பட்டுள்ளது. அத்தனை சந்திரர்களின் களங்கப்பகுதிகள் கேசங்கள் என்ற பெயரில் பின் புலமாக வைக்கப்பட்டுள்ளன. (95)

विन्यस्तमिन्द्रमणिकन्दलसुन्दरेषु
केशेषु ते स्फटिकनिर्मलमिन्दुखण्डम् ।
आधारसंगतिवशादसितायमानं
इन्दीवरच्छदवतंसदशां बिभर्ति ।। ९६ ।।

இந்திர நீலக்கற்களின் அழகிய காந்தியுடன் உள்ள உனது கூந்தலில் செருகப்பட்ட படிகம் போன்ற தூய்மைமிக்க சந்திரனின் துண்டு, தனக்கு அடித்தளமாக அமைந்த கூந்தலின் சேர்க்கையால் கறுமை பெற்று நீல அல்லிப் பூவிதழாலான அணியாகியுள்ளது. (96)

चिन्तामणिस्त्रिभुवनेश्वरि कौस्तुभश्च
ख्यातौ मणी तव गृहाङ्गणकुट्टिमस्थौ ।
किं रत्नमन्यदुपलभ्य किरीटकोटिं
वाचस्पतिप्रभृतयस्तव वर्णयन्तु ।। ९७ ।।

மூவுலகின் அரசியே ! சிந்தாமணி கௌஸ்துபம் என்ற இரு ரத்தினங்கள் உலகில் புகழ் பெற்றவை. அவை உனது வீட்டுச் சிற்றறைச் சுவற்றில் பதிக்கப்பட்டுள்ளன. கிரீடப்பகுதியில் உள்ள ரத்தினங்களை இது என்ன ரத்தினம் என பிருஹஸ்பதி முதலானோர் விளக்கட்டும். (சிறு அறையின் சுவற்றில் கௌஸ்துபமும் சிந்தாமணியும் பதிக்கப்படுமாஞல் கிரீடத்தில் பதித்துள்ளதை மதிப்பிட எவரால் முடியும் !) (97).

प्रादुर्भवत्तरणिबिम्बशतारुणानि
पर्याप्तशीतकिरणायुतशीतलानि ।
शृङ्गारसारपरिवाहमयानि मातः
अङ्गानि केऽपि चरमे जनुषि स्मरन्ति ।। ९८ ।।

தாயே ! உதிக்கின்ற நூறு சூரியர்களைப் போல் சிவந்த உன் அங்கங்கள் பத்தாயிரம் சந்திரர்களின் குளிர்ச்சி யுள்ளவை. சிருங்காரத்தின் (அழகின்) ஸாரத்தின் வெள்ளப் பெருக்கானவை. ஏதோ சிலரே அவற்றைத் தம் கடைசிப் பிறவியில் (முக்திக்கு முன்னர்) நினைக்கின்றனர். (அவர்களுக்கு மறுபிறப்பில்லை) (98)

प्रत्यग्रकुङ्कुमरसाकलिताङ्गरागं
प्रत्यङ्गदत्तमणिभूषणजालरम्यम् ।
ताम्बूलपूरितमुखं तरुणेन्दुचूडं
सर्वारुणं किमपि वस्तु ममाविरस्तु ।। ९९ ।।

புதிய குங்குமப்பூக் குழம்பாலான நறுமணப் பூச்சு பூசியதும், ஒவ்வொரு அங்கத்திலும் ரத்தின ஆபரணங்கள் பூண்டதும், தாம்பூலத்தை வாய் நிறைய நிரப்பிக் கொண்டதும், இளஞ்சந்திரனைச் சிரஸில் சூடியதும், எங்கும் சிவந்து காண்பதுமான அந்த அதிசயப்பொருள் என்முன் தோன்றட்டும். (99)

अर्धं स्त्रियस्त्रिभुवने सचराचरेऽस्मिन्
अर्धं पुमांस इति दर्शयितुं भवत्या।
स्त्रीपुंसलक्षणमिदं वपुरावृतं यत्
तेनासि देवि विदिता त्रिजगच्छरीरा॥ १००॥

அசைவதும் அசையாததுமான பொருளாலான மூவுலகிலும் பெண்கள் பாதியும் ஆண்கள் பாதியும் என்பதைக் காட்ட பெண்ணும் ஆணுமான உனது உருவம் உலகால் மறைக்கப்பட்டுள்ளது. அதனால் மூவுலகாலான உடல் கொண்டவள் என உலகம் உன்னைப் புரிந்து கொண்டுள்ளது. (நீ தெரிந்தால் உலகம் தெரியாது. உலகம் தெரிந்தால் நீ தெரியமாட்டாய்.) (100)

निर्मासि संहरसि निर्वहसि त्रिलोकीं
वृत्तान्तमेतमपि वेत्ति न वा महेशः।
तस्येश्वरस्य गिरिजे तव साहचर्यात्
जातः श्रुतिष्वपि जगज्जनकत्ववादः॥ १०१॥

மூவுலகையும் படைக்கிறாய்; ஒடுக்குகிறாய்; தாங்குகிறாய் என்ற இந்த உண்மையை மகேசரும் அறிவாரோ, அறியமாட்டாரோ ? மலைமகளே ! அந்த ஈசனுக்கு உனது கூட்டுறவால் தான் உலகின் தந்தை என்ற அறிமுகம் வேதத்திலும் உண்டானது. (101)

सत्ताऽस्यखण्डसुखसंविदसि त्रिलोकी-
सर्गस्थितिप्रतिहतिष्वपि निर्व्यपेक्षा।
त्वामन्तरेण शिव इत्यवशिष्यते किं
अर्धं शिवस्य भवतीत्यनभिज्ञवादः॥ १०२॥

நீயே உண்மையில் பேரிருக்கை. நீயே துண்டாடப் பெறுத பேரானந்த உணர்வு. மூவுலகையும் படைக்கவும் தாங்கவும் ஒடுக்கவும் பிறரது உதவி எதிர்பாராமல்

செயல்படுபவள். உன்னையல்லால் சிவன் என்று ஒன்று மிஞ்சியிருக்குமா ? நீ சிவனின் பாதி என்பது அறிவிலியின் கூற்று. (102)

नास्मिन् रविस्तपति नात्र विवाति वातो
नास्य प्रवृत्तिमपि वेद जगत्समस्तम्।
अन्तःपुरं तदिदमीदृशमन्ध(न्त)कारेः
अस्मादृशास्तु सुखमत्र चरन्ति बालाः ॥ १०३ ॥

இங்கு (சிவனது அந்தப்புரத்தில்) சூரியன் ஒளிர்வதில்லை. காற்று வீசுவதில்லை. இங்கு நடப்பதை உலகம் அறியாது. அந்தகாஸுரனின் (யமனின்) எதிரியான அந்த சிவனது அந்தப்புரம் அத்தகையது. ஆனால் எம்மைப் போன்ற சிறுவர்கள் அங்கு சுகமாக நடமாடுவர். (103)

त्वत्संनिधानरहितो मम मास्तु देशः
त्वत्तत्त्वबोधरहिता मम मास्तु विद्या।
त्वत्पादभक्तिरहितो मम मास्तु वंशः
त्वच्चिन्तया विरहितं मम मास्तु चायुः ॥ १०३ ॥

உன் அருகாமையற்ற தேசம் எனக்கு வேண்டாம். உன் உண்மையான நிலையை விளக்காத கல்வி எனக்கு வேண்டாம். உன் திருவடிகளில் பக்தி கொள்ளாத வம்சம் எனக்கு வேண்டாம். உன் நினைவில்லாத ஆயுள் எனக்கு வேண்டாம். (104)

त्वं देवि यादृगसि तादृगसि त्वमीदृग्
एषेति वक्तुमिव बोद्धुमपि क्षमः कः।
मामेव तावदविदन्नतिपामरोऽहं
मातः स्तुतिं त्वयि समर्पयितुं विलज्जे ॥ १०५ ॥

நீ எவ்வாறு உள்ளாயோ அவ்வாறு உள்ளாய்- நீ இவ்வாறு உள்ளாய் எனச் சொல்லவோ அவ்வாறு

சொன்னதைப் புரிந்து கொள்ளவோ தகுதி எவருக்கு உள்ளது ? என்னையே இத்தகையவன் என உணராத அறிவிலி நான். தாயே ! உன்னிடம் இந்தத் துதியைக் காணிக்கையாக முன் வைக்க வெட்கப்படுகிறேன். (105).

काचित्कृता कृतिरिति त्वयि साऽर्पितेति
कापि प्रमोदकणिका न ममान्तरङ्गे ।
मौढ्यं मदीयमिह यद्विदितं ममैव
किं त्वम्ब विश्वसिमि दीनशरण्यतां ते ।। १०६ ।।

ஏதோ ஒன்று என்னால் இயற்றப்பட்டதென்றும் உனது முன்னர் அர்ப்பணம் செய்யப்பட்டதென்றும் என் உள்ளத்தில் ஏதோ ஒரு மன நிறைவின் துளிகூட ஏற்படவில்லை. என் அறியாமை எனக்குத் தெரிந்ததே. அம்மா ! நீ எளியவருக்குப்புகலிடமாயுள்ளதை நம்புகிறேன்.

कालानपास्य विषुवायनसंक्रमादीन्
अस्तंगते हिमकरे च दिवाकरे च ।
अम्ब स्मरेयमपि ते चरणारविन्दं
आनन्दलक्षणमपास्तसमस्तभेदम् ।। १०७ ।।

தாயே ! விஷுவம், அயனம், ஸங்க்ரமணம் முதலிய காலவரைகளை உதறிவிட்டு, சந்திரனும் ஸூரியனும் மறைந்தபோது, வேற்றுமையுணர்வில்லாத ஆனந்த வடிவான உன் திருவடித்தாமரையை நினைப்பேனே ? (உடலும் உள்ளமும் அடங்கியதும் வெளியே வேற்றுமையை உணர்த்துகிற தேசகாலவரை தானே மறையும். அப்போது ஒரே மூடநிலையாக இல்லாமல் பேரொளியும் பேரிருக்கையும் பேரறிவும் பேரானந்தமுமான தேவியின் திருவடிகள் காணப்பெறுமா?) (107)

चतुरध्यायीरूपं कलहंसव्यञ्जनं जगन्मातुः ।
अपरब्रह्ममयं वपुरन्तः शशिखण्डमण्डनमुपासे ।। १०८ ।।

நான்கு அத்தியாயங்கள் கொண்ட பிரும்ஹ ஸூத்ரங்கள் என்ற உலகத்தாயின் வடிவம் ஹம்ஸர்களை (ஜ்ஞானிகளான அன்னபக்ஷிகளை)த் தம் அடையாளமாகக் கொள்ளும். (ஸமாதி நிலையில் அவர்களால் உணரப்பெறுகிற பிரும்ஹம் அது.) சந்திரனது துண்டை அணியாகக் கொண்ட தேவி அபரப்ரம்ஹ வடிவம். அதனை உள்ளத்தில் வழிபடுகிறேன். (108)

इति श्रीनीलकण्ठदीक्षितविरचितः आनन्दसागरस्तवः संपूर्णः ॥

श्यामासपर्याक्रमः

(श्रीललितामहात्रिपुरसुन्दर्याः प्रधानसचिवपदम-लङ्करोति श्यामा । तदुपासनद्वरा श्रीविद्या शीघ्रं प्रसी-दति । यथा राजदर्शनोत्सुका आदौ प्रधानसचिवमुपसेव्य तत्द्वारा राजदर्शनं कुर्वन्ति, तथैव श्यामायाः प्रथमं उपासनं न्याय्यम् । प्रधानद्वारा राजप्रसादनं हि न्याय्यम् इति परशुरामः । श्रीमान् साधकः श्यामलां देवीमाराधयिषुः श्रीक्रमोक्तक्रमेण काल्यकृत्याह्निके निर्वर्तयेत् । अत्र विशेषः - श्रीगुरुपादुकायामादौ त्रितारीस्थाने बालायोगः । सर्वकारणभूतायाः सम्विदश्चिन्तनं मूलाधारादि-द्वादशान्ताख्यललाटोर्ध्व-भागावधिकम् । तत्र तत्र यथोचितं सम्बुद्ध्यादीनामूहः । आदित्यमण्डले सङ्गीतयोगिन्या भावनम् । मूलेन अर्घ्यदानम् ।

यागमन्दिरप्रवेशः

अपराह्णे श्यामापूजा करणीया । अथापराह्णे यागमन्दिरमागत्य द्वारस्थण्डिलं गोमयेनोपलिप्य